1981 ஜனவரி 24]

சோளிங்கரில் பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண் 26—திரு. சி. கோபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்கும் எண்ணம் இவ்வரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. சி. கோபால் : வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கரில் கூட்டுறவு பால்வழங்கு சங்கத்தில் நாள்தோறும் ஏறக்குறைய 5,000 லிட்டர் பாலுக்கு மேல் உற்பத்தியாகிறது. அதன் சுற்று புறத்தில் உள்ள கிராமங்களில் இருந்தும் ஏறக்குறைய 4,000 லிட்டர் பால் தினந்தோறும் உற்பத்தியாகிறது. மழை காலங்களில் பத்தாயிரம் லிட்டருக்கு மேல் பால் உற்பத்தியின் அளவு அதிகமாகிறது. சாதாரணமாக உற்பத்தியாகிற பாலை அவர்கள் பாலுச்செட்டிசத்திரத்திற்கு அங்குள்ள பால்குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்புகிறார்கள். மழை காலங்களில் பால் உற்பத்தி அதிகமாகும்போது அவர்கள் எங்களுக்கு இந்த அளவிற்குப் பால் தேவை இல்லை என்று சொல்லிவிடுவதால் உற்பத்தித்திறன் இருந்தும் கூட உற்பத்தியாகிற பாலைப் பயன்படுத்துகிற நிலை அல்லது வழிமுறை இல்லாததால் சோளிங்கர் நகரில் அடுத்த ஆண்டிலாவது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் முயற்சியை மேற்கோள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பாலுச்செட்டி சத்திரத்திலுள்ள குளிரூட்டு நிலையம் மட்டுமல்லாமல் வேலூருக்கு மூன்று மைல் அண்மையில் இருக்கிற சத்துவாச்சாரி பால்பதனிடும் நிலையத்திலும் சோளிங்கர் அதை ஒட்டியிருக்கிற பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்கிற பாலை பதனிடுகிற வசதி செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் சோளிங்கரில் தனியாக ஒரு பால் குளிரூட்டு நிலையம் அமைத்தால் அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக இருக்காது என்ற காரணத்தாலும் அந்த முயற்சி இப்போது மேற்கொள்ளப்படமாட்டாது என்பதை உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சி. கோபால் : பாலுச்செட்டிசத்திரத்திலும், சத்துவாச்சாரியிலும் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களில் அதிகப்படியான பாலை எடுக்க முடியாத நிலையில், வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கை மாவட்டத்திலும் உற்பத்தியாகிற பாலை எடுக்க முடியாத நிலையில் அண்டை மாநிலத்திலுள்ள

சித்தூரிலுள்ள குளிரூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் செல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

வேளாண்மைப் பயிற்சி பெற்றவர்கள்.

***வினா எண் 27—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறையால் நடத்தப்படும் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 1977-ம் ஆண்டில் இருந்து 1980 வரை எத்தனை மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1977-ம் ஆண்டிலிருந்து 31–7–80 முடிய வேளாண்மைத்துறையால் நடத்தப்படும் வேளாண்மைப் பயிற்சி பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 20 பேர்களுக்கு அரசாங்கத்தால் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால் : வேளாண்மைத்துறையில் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 813.

திரு. த. வேணுகோபால் : அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி அளிக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்தப் பயிற்சிப் பள்ளியின் முக்கிய நோக்கமே கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களுக்கு முன்னேற்ற சாகுபடி முறைகளில் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதுதான். வேலைவாய்ப்பு உத்தேசத்தோடு இந்தப் பள்ளிகள் நடத்தப்படுவதில்லை. அவ்வப்போது வாய்ப்புகள் ஏற்படும்போது நிச்சயமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. மு. அப்பாதுரை : அரசால் நடத்தப்படும் பள்ளிகள் தவிர தனியார்கள் இப்படிப்பட்ட பள்ளிகள் நடத்துவது அரசுக்குத் தெரியுமா ? அப்படி நடத்தப்படுகிற பள்ளிகளில் தவறான முறையில் பணம் வாங்கப்படுவதும் அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தெரியாது. தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.